## *தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை 2013 -க்கான மழை முன்னறிவிப்பு*

*எதிர்வரக்கூடிய 2013-ம் ஆண்டின் தென்மேற்குப் பருவமழைக்காலத்திற்கான (ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை) மழை பற்றிய முன்னறிவிப்பு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்தியரேகையை ஒட்டியுள்ள கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை மற்றும் தென் மண்டல காற்றழுத்த குறியீடு ஆகியவற்றை உபயோகித்து ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து பெறப்பட்ட மழை மனிதன்* (Australian Rainman International 4.2) *என்னும் கணிணி கட்டமைப்பைக் கொண்டு 2013-ம் ஆண்டின் தென்மேற்குப் பருவமழைக்கான முன்னறிவிப்பு பெறப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 60 சதவிகித வாய்ப்பாக எதிர்பார்க்கப்படும் மழையளவு கீழே தரப்பட்டுள்ளது.*

*தென்மேற்கு பருவ காலத்தில் **சராசரி மழையளவை காட்டிலும் அதிகமாக மழை** எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள் தூத்துக்குடி மற்றும் விருதுநகர்.*

*தென்மேற்கு பருவ காலத்தில் **சராசரி மழையளவு** எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள் அரியலூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, திருவாரூர், திருச்சி, விழுப்புரம் மற்றும் சேலம்.*

*தென்மேற்கு பருவ காலத்தில் **சராசரி மழையளவை ஒட்டிய மழை** எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள் திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோவை, தர்மபுரி, சென்னை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தேனி.*

*தென்மேற்கு பருவ காலத்தில் **சராசரி மழையளவை காட்டிலும் குறைவான மழை** எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள் ஈரோடு, கரூர், மதுரை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், சிவகங்கை, மற்றும் திருப்பூர்.*

*தென்மேற்கு பருவ காலத்தில் மலைப்பிரதேசங்களான நீலகிரி மற்றும் திண்டுக்கல்*
*மாவட்டங்களில் **சராசரி மழை** எதிர்பார்க்கலாம். அதிக மழை பெறும் கன்னியாகுமரி மாவட்டத்தில் **சராசரி மழையளவை ஒட்டிய மழை** எதிர்பார்க்கலாம்.*

***தகவல்***
***வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்***
***பயிர் மேலாண்மை இயக்ககம்***
***தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்***
***கோயமுத்தூர் - 641 003.***

# SOUTH WEST MONSOON FORECAST - 2013

